## திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு ஜுன் மாதம் 7ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்காணும் ஏலஉரிமத்திற்கு செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஏல உரிமதாரர் திரு.முத்துகிருஷ்ணன் என்பவரால் 31.10.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | பதிவேடு விபரம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சந்திப்பு மதுரை ரோட்டில் அமைந்துள்ள வேன் ஸ்டாண்டில் 2013–2016 முடியவுள்ள காலங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | தச்சநல்லூர் மண்டல அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2017–2018 III Vol பக்கம் – 13 | 36000 |
| | | மொத்தம் | 36000 |

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி சந்திப்பு மதுரை ரோட்டில் அமைந்துள்ள வேன் ஸ்டாண்டில் 2013–2016 முடியவுள்ள காலங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏல உரிமதாரரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை பதிவேடு தச்சநல்லூர் மண்டல அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2017–2018 III Vol பக்கம் – 13 இருப்பில் உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/– மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)–ன்படி வைப்புத் தொகை ரூ.36000/–னை திரு.முத்துகிருஷ்ணன் உரிமதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 1

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/5691/2018–தச்சை)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க UGSS Phase II-ன் கீழ் பணிகள் Larsen & Toubro Limited L&T Construction Water and Effluent Treatment நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நடைபெற்று வரும் பணிகளுக்கு பணிபுரியும் Larsen & Toubro Limited L&T Construction Water and Effluent Treatment நிறுவனத்தின் பணியாளர்கள் தங்குவதற்கு Labour colony அமைக்க பார்வையில் கண்ட கடிதத்தின்படி அனுமதி வேண்டியுள்ளனர். மேற்படி வேண்டுதலின்படியும், தென்காசி சாலையில் பழையபேட்டை மின்வாரிய அலுவலகத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடம் தற்போது காலியாக மேடு பள்ளமாக உள்ளது. மேற்படி வார்டு எண் AE, பிளாக் எண் 14, சர்வே எண் 2022/2ல் அமைந்துள்ள காலியிடத்தில் அருகில் உள்ள நிலஉரிமையாளர்கள் மற்றும் வெளிநபர்கள் மேற்படி இடத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கவும், மேற்கண்ட சர்வே எண் 2022/2–ல் உள்ள இடத்தில் வடகிழக்கு ஓரமாக 80.00 மீ x 60.00 மீ = 4800 சமீ பரப்பளவில் லேபர் காலனி அமைத்துக் கொள்ளவும் மற்றும் மேற்கண்ட சர்வே எண் 2021/1, 2022/2, 2024/2 மற்றும் 2028/2 ஆகிய மாநகராட்சிக்கு சொந்தமான இடம் முழுவதையும் கிணற்று சரல் நிரப்பி மட்டப்படுத்திடவும், மேற்கண்ட மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் சுற்றிலும் Fencing அமைத்து பாதுகாப்புவேலி அமைத்து பாதாள சாக்கடை திட்டப்பணி முடிந்தபின்

மேற்படி பாதுகாப்பு வேலியுடன் மாநகாட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 80.00 மீ x 60.00 மீ அளவில் (சர்வே எண் 2022/2) Labour colony அமைக்க அனுமதி வழங்கவும், மேற்படி Labour colony இடத்திற்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி கணக்கீடு செய்யப்பட்ட மாதவாடகை ரூ.2,39,040/—க்கு வாடகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ள மாநகாட்சிக்கு சொந்தமான காலியிடத்தை பாதுகாக்கும் நோக்குடன் மேற்கண்ட நிபந்தனைகளுடன் Larsen & Toubro Limited L&T Construction Water and Effluent Treatment நிறுவனத்தின் பணியாளர்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அமைக்கும் உபயோகத்திற்காக 80.00 மீ x 60.00 மீ = 4800 சமீ பரப்பளவு உள்ள மேற்படி இடத்திற்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி கணக்கீடு செய்யப்பட்ட மாத வாடகை ரூ.2,39,040/—க்கு வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 2

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/1134/2019—திலி)

---

3) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 40 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 645 நபர்களை 05.10.2018 முதல் 88 நாட்கள் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத் தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018—ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 4 வார்டு அலுவலகங்கள் மற்றும் சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மேற்படி பணியாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி சுய உதவிக்குழுக்களின் அனுமதி காலம் 31.03.2019 உடன் முடிவடைகின்றது.

எனவே கீழ்க்கண்ட விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் உள்ள கீழ்க்கண்ட 645 நபர்களை 03.04.2019 முதல் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியவும் அதற்கான செலவினத் தொகைக்காக மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிக்குழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீ ஜெயம் சுகாதாரப் பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதாரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ பேராட்சி அம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீ செல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக்குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களாஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுயஉதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | செம்மொழி சுயஉதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப் பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமயன்பட்டி உரக்கிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

அலுவலகக் குறிப்பு:

அ) உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ஐப் பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/–என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.3) துறை, நாள் 04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/– ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் மாதம் ஒன்றுக்கு ரூ.65,59,650/– ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 40 சுய உதவிக் குழுக்களை (645 நபர்கள்) நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/– மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை எண் 3550/2017 நாள் 25.07.2017–ன்படி மாமன்றத் தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018–ன்படி தினஊதிய அடிப்படையில் 03/01/2019 முதல் 31/03/2019 முடிய 88 நாட்கள்

பணிபுரிய அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைகின்றது. மேலும் 03.04.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தியதற்கும், அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 3

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(எச்2/7560/98–மை.அ)**

---

4) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2238/3/2019, நாள் 25.02.2019–ல் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கொள்கை மற்றும் செயல்திட்டம் குறித்து அறிக்கை தயார் செய்து, அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி திடக்கழிவு மேலாண்மையின் கொள்கை மற்றும் செயல்திட்டம் குறித்து 26 பக்கங்கள் கொண்ட ஆங்கிலம் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை மாவட்ட அரசிதழில் வெளியிட பக்கம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.2500/– வீதம் 26 பக்கங்களுக்கு சுமார் ரூ.65,000/–ஐ மாவட்ட கருவூலகத்தில் செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி செலவுத் தொகைக்கு மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கொள்கை மற்றும் செயல்திட்டம் குறித்த ஆங்கிலம் அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.65,000/–க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 4

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் எச்2/11811/2016)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலப் பகுதியில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும், மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நலச்சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுயஉதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்க்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்கு குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத் தீர்மானம் எண் 13, நாள் 28.03.2018–ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் மாமன்றம் தீர்மானம் எண் 169, நாள் 04.02.2019–ன் பிரகாரம் 25.03.2019 உடன் முடிவடைவதால் மேலும் 28.03.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி

பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலப் பகுதியில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும், மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நலச்சங்கங்களிலும் மொத்தம் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுயஉதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்கு குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் துப்புரவு பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத் தீர்மானம் எண் 13, நாள் 28.03.2018–ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் மாமன்றம் தீர்மானம் எண் 169, நாள் 04.02.2019–ன் பிரகாரம் 28.12.2018 முதல் 25.03.2019 உடன் முடிவடைவதால் மேலும் 28.03.2019 முதல் 88 நாட்களுக்கு ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதற்கு மாமன்ற பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 5

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(எச்2/96/2018)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்கள், மாண்புமிகு மேயர், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானம் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர், ஆணையாளர் ஆகியோர்களின் குடியிருப்புகளில் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக்கழகம் (டெக்ஸ்கோ) மூலம் 18 பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்புப்பணி, கடை வாடகை வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணிக்கு 25 டெக்ஸ்கோ பாதுகாப்பு பணியாளர்களும் ஆக மொத்தம் 43 பணியாளர்கள் மாமன்றத் தீர்மானம் எண் 8, நாள் 28.03.2018–ன்படி 01.04.2018 முதல் 31.03.2019 வரை பணியில் அமர்த்திக்கொள்ளவும் அதற்குரிய ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி 43 டெக்ஸ்கோ பணியாளர்கள் கீழ்க்கண்டுள்ளவாறு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண். | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | தலைமை காவலர் | 1 | 18955/– |
| 2. | பாதுகாவலர் | 18+18 | 16189/– |
| 3. | பாதுகாவலர் வாகன காப்பகம் | 3 | 16189/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் | 3 | 18955/– |

மேற்படி நிறுவனத்தாருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் (Agreement) 31.03.2019 உடன் முடிவடைகின்றது. மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அவசியம் கருதி 01.04.2019 முதல் 31.03.2020 முடிய மேலும் ஒரு வருட காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்கள் (Security Guard) 39 நபர்களையும் பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.16189/–, தலைமை காவலர்–1 மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர்–3 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.18955/– மற்றும் 12% சேவைக்கட்டணமும், 18% சேவை வரி, (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 43 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 43 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01.04.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினங்களுக்கு 2019–2020 வரவு செலவுத்திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் இந்திய பாராளுமன்ற தேர்தல் 2019 நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 6

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(சி3/8109/2018)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலக கட்டுப்பாட்டில் பணிபுரியும் தமிழ்நாடு முன்னாள் இராணுவ கழகத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கு அரசாணை எண் 1115, பொதுத் (முன்னாள் இராணுவத்தினர்) துறை நாள் 25.09.2015 மற்றும் தொழிலாளர் ஆணையர் அறிவிக்கை எண் Z3/7657/19, நாள் 16.03.2019–இன்படி 01.04.2019 முதல் அகவிலைப்படி உயர்வுசெய்து வழங்குவதற்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்கக் கோரியுள்ள தமிழ்நாடு முன்னாள் இராணுவ கழக பொது மேலாளர் கடிதம் எண் TEXCO / TNMW/ 1148 / Revised VDA 2019, dated 15.04.2019 கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி | தற்போது 1.4.2018 முதல் வழங்கப்படும் அகவிலைப்படியுடன் கூடிய ஊதியம் | 1.4.2019 முதல் கூடுதல் அகவிலைப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| 1 | காவலர் | ரூ.16189/– | ரூ.16639/– |

அலுவலகக்குறிப்பு

தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழக பொது மேலாளர் கடிதம் எண் TEXCO / TNMW 1148 / Revised VDA 2019, dated 15.04.2019-ல் தெரிவித்துள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் இராணுவத்தினர் கழகத்தைச் சார்ந்த 18 பாதுகாவலர்களுக்கு (Security Guard) வழங்கப்படும் அகவிலைப்படியுடன் மாத ஊதியத்தினை ரூ.16189/– லிருந்து ரூ.16639/– ஆக உயர்த்தி ஊதியம் வழங்கவும், மேற்கண்ட

காலத்தில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிலுவை தொகை 01.04.2019 முதல் வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 7

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(கோப்பு எண் சி3/9900/2010 மை.அ.)

---

8) அரசாணை எண்: (டி) 191 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்சி5) நாள்: 28.05.2019ல் செயல்திறன் பணியாளர் நிலை –1 / செயல்திறன் பணியாளர் நிலை –2 பணியிடத்தில் பி.இ மற்றும் டிப்ளமோ கல்வித்தகுதி பெற்று பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு உதவிப்பொறியாளர் / இளநிலைப்பொறியாளர் பணியிடத்தில் பணிநியமனம் மற்றும் பதவியுயர்வு வழங்க கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

11 (a) The orders issued in G.O. (D) .416 MA&WS Dept. dated 15.09.1999 i.e. while resorting for direct recruitments for the post of Assistant Engineers / Technical Assistants, the names of any employee working in the Corporation having BE/ Diploma qualification may be considered for appointment as Assistant Engineer or Technical Assistant as the case may be, ie extended to Tirunelveli City Municipal Corporation also

(b) The Commissioner, Tirunelveli Corporation being the Appointing Authority for the post of Asst. Engineer and Junior Engineer is directed to take necessary action following the instruction issued in the above G.O and

(i) "To Promote Thiru. Dhanraj Sathyanathan , Skilled Assistant Grade - I (Diploma in Engineering )as Junior Engineer and also to take necessary action to promote senior persons having similar qualifications and working as Skilled Assistant Grade – I and Skilled Assistant Grade – II as Junior Engineer under the Tamil nadu Municipal Corporation Engineering and Water Supply Sub- ordinate Service who are working in lower categories for more than 15 years without promotions by relaxing rules relating to method of recruitment by promotion and age.:

((ii)"To appoint Thiru.D.Sivasubramanian and 4 others skilled Assistant Grade – II who are having the qualification of BE. Degree and working for more than 15 years without promotion as Assistant Engineer under the Tamil nadu Municipal Corporation Engineering and water supply service as was done in the case of Coimbatore Corporation vide G.O. (D) No: 79 Municipal Administration and Water Supply Department dated 30.04.2001 by relaxing rules relating to method of appointment age and by following communal rotation."

அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.05.1998ன்படி திருநெல்வேலி மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விபரம் கீழ்க்கண்டவாறு

| பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிந்து வருபவர்களின் எண்ணிக்கை | காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இளநிலை பொறியாளர் / உதவி பொறியாளர் | 18 | 9 | 9 |
| செயல்திறன் பணியாளர் நிலை – 1 | 10 | 7 | 3 |
| செயல்திறன் பணியாளர் நிலை – 2 | 50 | 23 | 27 |

எனவே மேற்காணும் இளநிலைப்பொறியாளர் / உதவிப்பொறியாளர் காலிப்பணியிடத்தில், பி.இ கல்வித்தகுதி பெற்று இதுநாள்வரை எவ்வித பதவியுயர்வின்றி 15 வருடங்களுக்கு மேல் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஏ.பைஜூ என்பவரை தனது இளநிலை பொறியாளர் நிலையிலிருந்து (Redesignation) செய்து உதவி பொறியாளராக நியமனம் செய்தும்,

அரசாணையின்படி செயல்திறன் பணியாளர் நிலை –2 பணியிடத்தில் உரிய கல்வித்தகுதி பெற்று (பிஇ) 15 ஆண்டுகள் பதவியுயர்வு இன்றி பணிபுரிந்து வரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதுநிலைப்பட்டியலில் கண்டுள்ள தகுதியுள்ள கீழ்க்கண்ட 5 பணியாளர்களுக்கும், அரசாணையின்படி விதிகளை தளர்வு செய்து உதவிப்பொறியாளராக நியமனம் செய்யவும்

1) திரு.எஸ்.நாகராஜன், செயல்திறன் பணியாளர் நிலை – 2
2) திரு. எஸ்.சங்கரநாராயணன்.செயல்திறன் பணியாளர் நிலை – 2
3) திரு.எஸ்.சொரிமுத்துபட்டராஜா,செயல்திறன் பணியாளர் நிலை– 2
4) திரு.ஜி.பிலிப் அந்தோணி, செயல்திறன் பணியாளர் நிலை– 2
5) திரு.டி.சிவசுப்பிரமணியன், செயல்திறன் பணியாளர் நிலை– 2

ஊதிய தொகுப்பு 36400 –115700 level 16 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்தும் அரசின் உறுதியாக்கம் பெற்று ஊதியம் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

அ) பி.இ கல்வித்தகுதி பெற்று எந்தவித பதவியுயர்வின்றி 15 வருடங்களுக்கு மேல் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஏ.பைஜு என்பவரை தனது இளநிலை பொறியாளர் நிலையிலிருந்து (Redesignation) செய்து உதவிப்பொறியாளராக நியமனம் செய்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) அரசாணை எண்: (டி) 191 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்சி5) நாள்: 28.05.2019ல் குறிப்பிட்டுள்ளபடி பி.இ. கல்வித்தகுதி பெற்று 15 ஆண்டுகளுக்கு மேல் பதவியுயர்வின்றி செயல்திறன் பணியாளர் நிலை–2 பணியிடத்தில் பணிபுரிந்து வரும் திரு.எஸ்.நாகராஜன், திரு.எஸ்.சங்கரநாராயணன், திரு. எஸ்.சொரிமுத்துபட்டராஜா, திரு.ஜி.பிலிப் அந்தோணி, திரு.டி.சிவசுப்பிரமணியன் ஆகியோர்களுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி விதிகளை தளர்வு செய்து உதவிப்பொறியாளராக நியமனம் செய்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.

மேற்காணும் 6 நபர்களில் முதுநிலை வரிசை கீழ்க்கண்டவாறு இடம் பெறுவதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

1) திரு. ஏ.பைஜு, இளநிலை பொறியாளர்
2) திரு. எஸ்.நாகராஜன், செயல்திறன் பணியாளர் நிலை – 2
3) திரு. எஸ்.சங்கரநாராயணன், செயல்திறன் பணியாளர் நிலை – 2
4) திரு.எஸ்.சொரிமுத்துபட்டராஜா,செயல்திறன் பணியாளர் நிலை– 2
5) திரு.ஜி.பிலிப் அந்தோணி, செயல்திறன் பணியாளர் நிலை– 2
6) திரு.டி.சிவசுப்பிரமணியன், செயல்திறன் பணியாளர் நிலை– 2

இ) மேற்காணும் 6 நபர்களுக்கும் உதவிப்பொறியாளர் பணியிடத்தில் ஊதிய தொகுப்பு 36400–115700 level 16 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து அரசின் உறுதியாக்கம் பெற்று ஊதியம் வழங்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு நியமனம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 8

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் சி1/1080/2018 )